**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

உலகச் செல்வத்தைப் பெற்றிருப்போர் தம் சகோதரர் சகோதரிகள் தேவையில் உழல்வதைக் கண்டும் பரிவு காட்டவில்லையென்றால், அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்?

**(1யோவான்: 3:17)**

**இன்றைய வாசகங்கள்:**

ஆமோஸ்: 6: 1, 4-7;

திருப்பாடல்: 146: 6-10;

1 தீமோத்தேயு: 6: 11-16;

லூக்கா 16: 19-31.

தீர்ப்புக் கிடைத்தபின் மீண்டும் பழைய வாழ்க்கைக்குச் சென்று அதைச் சரிசெய்யமுடியாது என்று கண்டுபிடித்தார். நாம் இவ்வுலகில் வாழும்போது எவ்வாறு மக்களை நடத்தவேண்டுமென்ற கூடுதல் கவனத்தை இந்த அச்சமூட்டும் காட்சி நமக்கு விவரிக்கின்றது கடவுளின் அரசை உருவாக்கவும், ஒருவருக்கொருவர் உதவவும் நம்மிடமிருக்கும் செல்வங்களையும் வளங்களையும் முடிந்தவரைப் பயன்படுத்திட நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

இயேசு கூறிய இந்த உவமையில் ஒரு திருப்பத்தை நாம் காண்கிறோம். மரணத்திற்குப் பின் இருக்கும் தீர்ப்பைப் பற்றி பூமியில் இருக்கும் தம் சகோதரர்களுக்கு எச்சரிக்குமாறு செல்வந்தர் மன்றாடுகிறார். அவருக்கு விதிக்கப்பட்ட விதியென்னவென்றால், இரு இடத்திற்கு இடையில் பெரிய பிளவு ஒன்று உண்டு என்று கூறப்படுகிறது. மோசேவுக்கும் இறைவாக்கினர்களுக்கும் அவர்கள் செவிசாய்க்காவிட்டால் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்து வந்தாலும் செவிசாய்க்கமாட்டார்கள் என்று ஆபிரகாம் கூறுகிறார். இந்தக் கூற்று, நம் கன்னத்தில் அறைவதுபோல இருந்தாலும் இதன் பொருள் என்னவென்றால், இந்த உலகில் நாம் எவ்வாறு வாழ்ந்தால், முடிவில்லா வாழ்வை அடையமுடியும் என்று அனைத்தும் நமக்குக் கற்பிக்கப்படுகிறது; நம்முடைய செல்வத்தில் மனம் திரும்பத் தேவையான தெய்வீகத்தன்மை இல்லாவிட்டால், தேவையில் இருப்போருக்கு உதவாவிட்டால் இவ்வாறுதான் நிகழும் என்று நாம் அறிகிறோம். இந்த உலகில் வாழ்ந்து மரணித்தபோதும், நம்முடைய அடையாளம் விண்ணகத்திலும், நரகத்திலும் இருக்கும் என்று இந்த உவமை கூறுகிறது.

நம் வாழ்வில் வரும் இலாசர் யார்? நம் அன்றாட வாழ்க்கையில் நாம் புறக்கணிக்கும் நபர்களா? எதுவும் இல்லாத ஒருவருக்காக, எதையாவது தியாகம் செய்ய வேண்டுமா? தியாகத்துடன் கூடிய அன்பை இயேசு நமக்குக் காட்டினார். தியாகத்தோடு பகிர்ந்துகொள்ளும் போது இன்னும் அதிகமாக நாம் கடவுளின் அரசைக் கட்டியெழுப்புகிறோம். ஏழை விதவைத் தாய் தனக்குள்ளதெல்லாவற்றையும் காணிக்கையாக அளித்த அந்த நிகழ்வை நினைவுகூருவோம். இந்த செயலையும், செல்வந்தரையும் வேறுபடுத்திப் பாருங்கள். தேவையில் இருப்போர் நம்மைச் சுற்றி எப்போதும் உள்ளனர். அவர்களை நாம் அறிந்திருக்கிறோமா அல்லது பார்க்கின்றோமா? நாம் செய்யும் அனைத்திற்கும் செய்யாதவற்றிற்கும் கணக்குக் கொடுக்கவேண்டுமென்பதை நாம் அறிந்திருக்கின்றோமா? கடவுள் அனைத்தையும், அனைவரையும் அறிந்திருக்கின்றார். ✣

INTERNAL CIRCULATION ONLY
BUL 39/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

25 செப்டம்பர் 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் ஆண்டின் 26 ஆம் ஞாயிறு
(World Day of Migrants and Refugees)

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **மலேசிய தினம் (செப் 16)**

# நம் வாழ்வில் வரும் இலாசர் யார்?



நம் மரணத்திற்குப் பின்னர் இருக்கும் வாழ்க்கையைப் பற்றி நாம் அடிக்கடி கேள்வி எழுப்புவோம். நாம் செய்த அல்லது செய்யாத அனைத்தும் நினைவில் கொள்ளப்படுமா? நாம் இவ்வுலகில் வாழ்ந்த நேர்மையான வாழ்க்கைக்கும் விண்ணுலக வாழ்வுக்கும் தொடர்புண்டா? இதற்கு இன்று ஒரு தெளிவான பதில் கிடைத்துள்ளது. இந்த உலகில் நன்றாக வாழ்ந்த செல்வந்தர், எரியும் நெருப்பில் வேதனையில் இருந்தபோது, ஏழை இலாசர் விண்ணகத்தில் எவ்வாறு வரவேற்கப்பட்டார் என்றுக் கண்டார்.